**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 105/2025 |
| வழக்கு சாட்சி | : | PW 10 |
| நாள் | : | 26.11.2025 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr.Chandrakumar | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | N.Ganesan | தொழில் | : | மருத்துவர் |
| கிராமம் | : | GH, Ponneri | சமயம் | : | |
| தாலுக்கா | : | Ponneri | வயது | : | |

1 முதல் 6 வரை எதிரிகள் ஆஜரில்லை, மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>முதல் விசாரணை</u> :**

நான் தற்போது பொன்னேரி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.08.2023 அன்று திருவள்ளூர், அரசு மருத்துவக்கல்லூரியில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவராக பணியில் இருந்தபோது மதியம் சுமார் 02.40 மணியளவில் வடமதுரையை சேர்ந்த நரசிம்மன் என்பவரை அவசர சிகிச்சை பிரிவில் நான் பரிசோதனை செய்தபோது அவரை 3 தெரிந்த நபர்கள் தாக்கியதாக தெரிவித்தார். அவருக்கு முதல் சிகிச்சை அளித்து விபத்து பதிவேடு வழங்கினேன். **அந்த விபத்து பதிவேடு அதசா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேலும், அவரை மேல்சிகிச்சைக்காக அறுவைசிகிச்சை மருத்துவரை பார்க்க அறிவுரை வழங்கினேன். மேற்கண்ட நபர் மருத்துவரின் அறிவுரையை ஏற்காமல் சிகிச்சையை மேற்கொள்ளாமல் மருத்துவமனையிலிருந்து சென்றுவிட்டதால் அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மையை குறித்து நான் விபத்து பதிவேட்டில் எந்தவித கருத்தும் கூறவில்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** - இல்லை.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM
Digitally signed by S TASNEEM
Date: 2025.11.26 15:54:01 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.